# புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்

**பாடம் 2**

## தேவனுடைய ராஜ்யம்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


அறிமுகம் ........ 1

நற்செய்தி ........ 2

அர்த்தம் ........ 2

தேவனுடைய ராஜ்யம் ........ 4

அசைக்க முடியாத சர்வாதிகாரத்துவம் ........ 6

விரிவடைந்த ராஜ்யம் ........ 7

தனித்துவத்தை மேம்படுத்துதல் ........ 8

இஸ்ரவேலின் தோல்விகள் ........ 9

இஸ்ரவேலின் நம்பிக்கைகள் ........ 10

வருகை ........ 14

எதிர்பார்ப்புகள் ........ 15

மூன்று மடங்கு வெற்றி ........ 20

தோல்வி ........ 21

மீட்பு ........ 27

முடிவுரை ........ 31




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# அறிமுகம்

ஒரு சிக்கல் நிறைந்த கதையைப் படிக்கும்போதெல்லாம் அதில் உள்ள பல விவரங்களை நாம் எளிதில் தவற விட்டு விடுவோம். ஆனால் கதையின் மிக முக்கியமான பகுதிகளைக் கண்டறிந்து அவற்றை மீண்டும் மீண்டும் குறிப்பிடுவதே இந்த சிக்கலைத் தவிர்ப்பதற்கான ஒரு வழி ஆகும். முக்கிய கூறுகளை மனதில் வைப்பதன் மூலம் அதிலுள்ள விவரங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதைக் காண முடியும். பல வழிகளில் பார்க்கும்போது புதிய ஏற்பாட்டு இறையியலைப் புரிந்து கொள்வதிலும் இதே காரியம் உண்மையாக இருக்கிறது. இந்த வேதவசனங்களைத் தோண்டத் தொடங்கும்போது, பல விவரங்களை நாம் கண்டறிவோம். ஆனால் எளிதில் அதன் விவரங்களை நாம் இழக்க வாய்ப்பு உண்டு. ஆகையால் புதிய ஏற்பாட்டில் உள்ள முக்கிய காரியங்களை அடையாளம் கண்டு அவற்றை மீண்டும் மீண்டும் குறிப்பிடுவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

*புதிய ஏற்பாட்டில் ராஜ்யமும் உடன்படிக்கையும்* என்கிற இந்தத் தொடரில் இது இரண்டாவது பாடம். ”தேவனுடைய ராஜ்யம்” என்று இதற்கு தலைப்பு வைத்திருக்கிறோம். இந்த பாடத்தில், புதிய ஏற்பாட்டின் மிக முக்கியமான போதனைகளில் ஒன்றை நாம் சுட்டிக்காட்டப் போகிறோம்: பாடத்தின் பெயர் தேவனுடைய ராஜ்யம் என்பதாகும்.

நாம் பார்க்கப்போவது போல், புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தின் கருப்பொருள் மிகவும் முக்கியமானதாகும். சரியாக புரிந்து கொள்ளப்பட்டால், புதிய ஏற்பாட்டு இறையியல் என்பது ராஜ்யத்தின் இறையியல் ஆகும். வேறு வார்த்தைகளில் கூறினால், புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் எழுதிய அனைத்தும், ஒரளவிற்கு தேவனுடைய ராஜ்யத்தை விளக்குவதோடு அதை மேம்படுத்தவும் செய்கின்றன.

புதிய ஏற்பாட்டு இறையியலில் தேவனுடைய ராஜ்யத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து இரண்டு கோணங்களில் ஆராயப் போகிறோம். முதலில், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் ராஜ்யத்தின் நற்செய்தி அல்லது சுவிசேஷம் என்று அழைத்ததைக் குறித்து பார்க்கப் போகிறோம். இரண்டாவது, ராஜ்யத்தின் வருகை அவர்கள் எழுதிய அனைத்திலும் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைப் பற்றி சுட்டிக்காட்டப் போகிறோம். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த இந்த உபதேசம் புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு பரிமாணத்தையும் நிலைநிறுத்துகிறது என்பதைக் காண இந்த இரண்டு தலைப்புகளும் நமக்கு உதவும். முதலில் ராஜ்யத்தின் நற்செய்தியிலிருந்து தொடங்குவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நற்செய்தி

புதிய ஏற்பாட்டை நன்கு அறிந்த அனைவருக்கும் அதன் இறையியல் மிகவும் சிக்கலாக கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது தெரியும். ஆனால் புதிய ஏற்பாட்டில் உள்ள உபதேசங்களில் எல்லோரும் புரிந்துகொண்டு வாழ்க்கையில் செயல்படுத்த முயற்சி செய்யத் தகுந்த ஒரு உபதேசம் ஒன்று இருக்கும் என்றால் அது சுவிசேஷமாகத் தான் இருக்கும். உண்மையில், கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் புரிந்து கொள்ளாவிட்டால், புதிய ஏற்பாட்டு இறையியலின் எந்தவொரு அம்சத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய திறன் நம்மில் மட்டுப்படுத்தப்படும் என்பதை நம்மில் பலரும் ஒப்புக்கொள்வோம். ஆனால் இது ஒரு தீவிரமான கேள்வியை எழுப்புகிறது. புதிய ஏற்பாட்டு இறையியலில் சுவிசேஷம் அல்லது ”நற்செய்தி” ஏன் மிகவும் முக்கியமானது? புதிய ஏற்பாட்டில் காணப்படும் பல உபதேசங்களில் எல்லாவற்றையும் விட இது ஏன் முக்கியமானதாக உள்ளது?நாம் பார்க்கவிருக்கையில், சுவிசேஷமானது தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய பரந்த போதனையுடன் இணைக்கப்பட்டுள்ளதால் புதிய ஏற்பாட்டு இறையியலில் அது மிகவும் முக்கியமானதாகும். தேவனுடைய நற்செய்தியைப் பற்றிய சுவிசேஷத்தின் இந்தக் கோட்பாடு புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு பரிமாணத்தையும் வடிவமைக்கிறது.

ராஜ்யத்தின் நற்செய்தியைக் குறித்து மூன்று படிகளில் பார்க்கப்போகிறோம். முதலில் நற்செய்தியின் அர்த்தம் என்ன என்பதைப் பார்ப்போம். இரண்டாவது, தேவனுடைய ராஜ்யத்தின் அடிப்படைக் கருத்தைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். மூன்றாவது, வேதாகம வரலாற்றில் இந்த கருப்பொருள் எப்படி வளர்ந்தது என்பதன் முக்கியத்துவத்தை நாம் கண்டுபிடிப்போம். தேவனுடைய ராஜ்யத்தினுடைய நற்செய்தியின் அர்த்தத்திலிருந்து நாம் தொடங்குவோம்.

## அர்த்தம்

ராஜ்யத்தின் சுவிசேஷம் என்பது கர்த்தராகிய ராஜா நமக்காக அறிவிக்கப்பட்ட நற்செய்தியைப் பற்றி பேசுவதற்கான ஒரு வழியாகும். குறிப்பாக, இயேசுவைப் பற்றிய புதிய ஏற்பாட்டு அறிவிப்புகளைப் பற்றி நாம் நினைக்கும் போது, இது ”ராஜா வந்துவிட்டார்” என்ற அறிவிப்பாகும். ஆனால் ”ராஜா வந்துவிட்டார்” என்பது மட்டுமல்லாமல், அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் அவருடைய அரசாட்சியை உறுதிப்படுத்தியுள்ளன என்பதன் அடிப்படையில் இயேசுவின் கர்த்தத்துவமும் ராஜரீகமும் அறிவிக்கப்பட்டது. எனவே, நற்செய்தி என்பது ஏற்கனவே நடந்த ஒரு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> விஷயத்தின் அறிவிப்பு என்கிற உணர்வு உள்ளது. நாம் எப்படி வாழ்கிறோம் என்பதற்கான தாக்கங்களை இது கொண்டுள்ளது. ஆனால் நற்செய்தி என்னவென்றால், இயேசு வந்துவிட்டார்; அவர் மரணத்தின் மூலம் மர்மமான முறையில் மரணத்தைத் தோற்கடித்தார்… ஆகவே, இந்த நற்செய்தியை ஏற்கனவே நிகழ்ந்த ஒன்றாக தேவன் நமக்கு அறிவிக்கிறார் என்கிற உணர்வு இருக்கிறது. எப்படியிருந்தாலும், நற்செய்தியில் இன்னும் நிறைவேற வேண்டிய வாக்குத்தத்தங்கள் நித்தியத்திற்கான தாக்கங்களைக் கொண்டிருக்கும்.
>
> –Dr. ரிச்சார்டு லின்ட்ஸ்

லூக்கா 4:43 இல் இயேசு தம்முடைய ஊழியத்தின் நோக்கத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

> நான் தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியை பிரசங்கிக்க வேண்டும் (லூக்கா 4:43).

“நற்செய்தி” என்ற பதம் லூக்கா 4:43 இல் ஒரு முறை மட்டுமே வந்தாலும், நற்செய்தியைப் பற்றிய கருத்து இந்த வசனத்தில் இரண்டு முறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. “நற்செய்தி” என்ற பதம் கிரேக்க பெயர்ச்சொல்லான *இவங்கலியோன்* என்பதிலிருந்து வருகிறது, இது புதிய ஏற்பாட்டில் 76 முறை வருகிறது. *இவங்கலியோன்* என்கிற வார்த்தையின் சொற்பிறப்பியல் ”நல்ல அறிவிப்பு” அல்லது ”நல்ல செய்தி” ஆகியவற்றைக் குறிக்கிறது.

ஆனால் இந்த வசனத்தில் “நற்செய்தியை அறிவிக்க வேண்டும்” என்று இயேசு சொன்னதையும் கவனியுங்கள். ”அறிவி” என்று அர்த்தம் கொள்ளுகிற கிரேக்க வினைச்சொல் *இவாங்கலிசோ* ஆகும். இந்தச் சொல் *இவங்கலியோன்* போன்ற கிரேக்க சொற்களின் ஒரே குடும்பத்திலிருந்து வருகிறது, மேலும் “நற்செய்தியை அறிவி அல்லது நற்செய்தியை பிரகடனப்படுத்து” என்பது இதன் அர்த்தமாகும். இது புதிய ஏற்பாட்டில் சுமார் 54 முறை வருகிறது. இந்தப் பதங்கள் அடிக்கடி வருவது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு இந்த கருத்து எவ்வளவு முக்கியமானது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

கிறிஸ்துவில் உள்ள இரட்சிப்பை அறிந்துகொள்ள ஒரு நபர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் விளக்கமாக இன்று பல சுவிசேஷ மார்க்கத்தார்கள் நற்செய்தியை அல்லது சுவிசேஷத்தைப் பற்றி நினைக்கிறார்கள். ஆனால் இயேசுவின் மனதில் இருந்தது இதுவல்ல. கிறிஸ்துவின் சீஷர்களாக மாறுவது எப்படி என்பதைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும், வேதவசனங்களில் உள்ள நற்செய்தி மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. ஒரு தனிநபரின் அல்லது

ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்களின் இரட்சிப்பைக் குறிப்பிடுவதை விட, *சுவிசேஷம்* என்பது தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றியின் நற்செய்தியாக இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

இதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பில் இருந்து "நற்செய்தியை அறிவி" என்ற சொல் நடையை பயன்படுத்தினார்கள் என்பதை நாம் உணர வேண்டும். பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பு நாம் முன்னர் குறிப்பிட்ட அதே வினைச்சொல்லான *இவாங்கலிசோவை* சுமார் 20 முறை பயன்படுத்துகிறது. இந்த வார்த்தை எபிரெய வினைச்சொல் *பசாரை* மொழிபெயர்த்தது, இதன் பொருள் "*நற்செய்தியைக்* கொண்டுவருவது அல்லது அறிவிப்பது" என்பதாகும். ஆனால், ராஜாக்களையும் ராஜ்யங்களையும் குறிக்க இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டபோது, அவை *போரில் வெற்றி* பற்றிய நற்செய்தியைக் குறித்தன என்று 1 சாமுவேல் 31:9 மற்றும் 2 சாமுவேல் 18:19 போன்ற வேத பகுதிகள் கூறுகின்றன. இதைக் கூர்ந்து கவனித்தல் முக்கியமானது, ஏனென்றால் புதிய ஏற்பாட்டில் உள்ள "நற்செய்தி" பெரும்பாலும் தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. இதன் விளைவாக, லூக்கா 4:43 இல் இயேசு இவ்வாறு கூறினார்:

> நான் தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தியை பிரசங்கிக்க வேண்டும் (லூக்கா 4:43).

உண்மையில் இந்த வாக்கியத்தை இப்படி நாம் மொழிப்பெயர்க்க முடியும்:

> நான் தேவனுடைய ராஜ்யத்தின் [வெற்றியின்] நற்செய்தியை பிரசங்கிக்க வேண்டும் (லூக்கா 4:43).

புதிய ஏற்பாடு தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் நற்செய்தியைப் பற்றி பேசும்போது, இது மிகவும் சிறப்பு வாய்ந்த வெற்றியைக் குறிக்கிறது, இதைக் குறித்து இந்த பாடத்தில் பின்னர் பார்ப்போம். முதலில் இது புதுமையாக தோன்றினாலும், புதிய ஏற்பாட்டில் உள்ள நற்செய்தி அல்லது சுவிசேஷத்தின் அடிப்படைக் கருத்து தேவனுடைய ராஜ்யத்தின் "[*வெற்றியின்*]" நற்செய்தி என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ராஜ்யத்தின் நற்செய்தி என்பது தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் நற்செய்தியைக் குறிக்கிறது என்பதை அறிந்துகொண்டோம். இப்போது நாம் தேவனுடைய ராஜ்யத்தின் அடிப்படைக் கருத்தைப் பற்றி ஆராய்ந்து பார்க்கத் தயாராக இருக்கிறோம்.

## தேவனுடைய ராஜ்யம்

புதிய ஏற்பாட்டில் குறைந்தது ஏழு முறையாவது தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. "ராஜ்யத்தின் நற்செய்தி" என்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சொற்றொடர் பின்வரும் வேத பகுதிகளுடன் சிறிய மாறுபாடுகளை மட்டுமே கொண்டுள்ளது (மத்தேயு 4:23; 9:35 மற்றும்24:14; லூக்கா 4:43; 8:1; மற்றும் 16:16; அப் 8:12). இந்த தொடர் நிகழ்வுகள் சுவிசேஷத்தை – அல்லது வெற்றியின் செய்தியை – தேவனுடைய ராஜ்யத்துடன் இணைப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இதைப் புரிந்துகொள்ள, இயேசுவும் அவருடைய சீஷர்களும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிப் பேசியபோது என்ன அர்த்தத்தில் பேசினார்கள் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

> தேவனுடைய ராஜ்யம் என்பது தேவனின் இடத்தில் தேவனுடைய மக்கள் மீது தேவன் ஆட்சி செய்வது ஆகும். வேதாகமத்தின் தொடக்கத்தில் ஆதியாகமம் 1 மற்றும் 2 இல் இதைக் காண முடியும். அங்கே தேவனுடைய மக்களாகிய ஆதாமும் ஏவாளும் தேவனுடன் உறவில் இருக்கிறார்கள், தேவன் ஆட்சி செய்கிறார். அவர்கள் தேவனின் இடமாகிய ஏதேன் தோட்டத்தில் இருக்கிறார்கள். பாவம் வந்த பிறகு, அங்கே குழப்பம் உண்டாகிறது, ஆனால் தேவன் தனது ராஜ்யத்தை மறுகட்டமைக்கிறார், முதலில் ஆபிரகாம் மூலமாகவும் பின்னர் ஆபிரகாமின் சந்ததியினர் மூலமாகவும், கடைசியாக இஸ்ரவேல் தேசம் எகிப்திலிருந்து வெளியேறிய பிறகு மோசே மூலமாகவும் தேவன் இதைச் செய்கிறார். இது தேவ ஜனமாகிய இஸ்ரவேல் மீது தேவன் ஆட்சி செய்வதாகும், இது தேவனின் இடமாகிய கானான் தேசத்தில் நடக்கிறது. ஆனால், அந்தப் பாதை கிறிஸ்துவின் வருகையில் இன்னும் முழுமையாக நிறைவேறியதைக் காண்கிறோம், மேலும் தேவன் கிறிஸ்துவை தம்முடைய ராஜாவாக நியமித்து ஆட்சி செய்கிறார் என்பதைக் காண்கிறோம். தேவனின் ஜனங்களாக யூதர்கள் மற்றும் புறஜாதியினர் உள்ளனர். அவர்கள் எல்லா தேசங்களிலிருந்தும், அனைத்து கோத்திரத்திலிருந்தும் மற்றும் மொழிகளிலிருந்துமாக இருக்கின்றனர். ஆனால் தேவனின் இருப்பிடம் பூமியில் இருக்கிற இடமாக அல்லாமல் புதிய எருசலேமாக இருக்கிறது, அதுவே நமது பரலோக வீடு… எனவே, புதிய ஏற்பாட்டில், தேவனுடைய ராஜ்யம் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும், தேசத்திலிருந்தும், மொழியிலிருந்தும், உலகெங்கும் சிதறிக்கிடக்கிற மக்கள் மீது கிறிஸ்து ஆட்சி செய்வதில் இருக்கிறது இது ஒரு குறிப்பிட்ட புவியியல் இடத்தில் இல்லை, ஆனால் பரலோகத்தில் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அதுவே நம் ஆவிக்குரிய வீடு. இயேசு திரும்பி வரும்போது தேவனுடைய ராஜ்யம் எப்படியிருக்கும் என்பதற்கான ஒரு கண நேர



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கண்ணோட்டத்தை புதிய ஏற்பாடு தருகிறது, மேலும் அந்த ராஜ்யம் இப்போது இந்த உலகில் மறைந்திருக்கிறது. கிறிஸ்து திரும்பி வரும்போது அது தெளிவாகக் காணப்படும்; எல்லா முழங்கால்களும் பணிந்து, எல்லா நாவும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று அறிக்கை செய்யும், மேலும் தேவன் தம்முடைய ராஜாவாகிய கிறிஸ்துவின் மூலமாக அவரை அறிந்து, பிதா என்று அழைக்கும் மக்களை பரலோகத்திலுள்ள புதிய எருசலேமில் முழுமையாக ஆட்சி செய்வார்.
>
> – Dr. கான்ஸ்டன்டைன் ஆர்.காம்ப்பெல்

தேவனுடைய ராஜ்யத்தை வேதம் இரண்டு முதன்மை வழிகளில் குறிக்கிறது. ஒருபுறம், இது பெரும்பாலும் தேவனின் அசையாத சர்வாதிகாரத்துவத்தின் அடிப்படையில் அல்லது அனைத்து சிருஷ்டிப்பின் மேல் அவர் நடத்தும் மாறாத ஆட்சியின் அடிப்படையில் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பேசுகிறது. இது அவரின் விரிவடைந்து வரும் ராஜ்யத்தையும், மனித வரலாறு முழுவதும் தேவன் தனது அரசாட்சியை வெளிப்படுத்திய விதத்தையும் குறிக்கிறது. அவரது அசைக்க முடியாத சர்வாதிகாரத்துவத்தை முதலில் பார்ப்போம்.

## அசைக்க முடியாத சர்வாதிகாரத்துவம்

1 நாளாகமம் 29:11 மற்றும் 1 தீமோத்தேயு 6:15 ஆகிய வேத பகுதிகள் முழு சிருஷ்டிப்பையும் தேவனுடைய ராஜ்யம் என்று பேசுகின்றன. ஏனென்றால் தேவன் எப்பொழுதும் ஆட்சி செய்திருக்கிறார், அவர் சிருஷ்டித்த அனைத்தையும் எப்போதும் ஆளுவார். தேவனின் சர்வாதிகாரத்துவம் இரண்டு நிலைகளில் (பரலோகத்திலும் பூமியிலும்) நடப்பதாக வேதம் பேசுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

பரலோகத்தைப் பொறுத்தவரை, 1 இராஜாக்கள் 8:27 போன்ற இடங்களில் தேவனின் அரசாட்சியைப் பற்றி வேதம் பேசுகிறது. இந்த வசனத்தில், ”வானங்களும் வானாதி வானங்களும்” கூட ”[தேவனை] கொள்ளமுடியாத” சிருஷ்டிக்கப்பட்ட இடம் என்பதை சாலொமோன் தெளிவுபடுத்தினார். ஆனால், தேவன் தம்முடைய சிருஷ்டிப்புகளுக்கு முன்பாக தன்னிலையிலிருந்து இறங்கி வந்து தன்னைத் தானே வெளிப்படுத்துகிறார்.

ஏசாயா 6:1; 2 நாளாகமம் 18:18; யோபு 1:6; சங்கீதம் 82:1; தானியேல் 7:9-10 போன்ற பகுதிகளும் லூக்கா 22:30 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 4–6 போன்ற புதிய ஏற்பாட்டு பகுதிகளும் பரலோகம் என்பது எல்லா வகையான செயல்களும் நடைபெறும் இடமாகவும் நாம் காணும் இந்த உலகத்திற்கு மேலே இருக்கக்கூடிய தேவனின் அரண்மனை என்பதைக் குறிக்கின்றன. தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரலோகத்தில் இருக்கிற சிங்காசனத்தில் இருந்துகொண்டு, நம் அறிக்கைகளைப் பெறுகிறார், ஜெபங்களைக் கேட்கிறார், நினைத்தவாறு திட்டமிடுகிறார், திட்டங்களை உருவாக்குகிறார் மற்றும் அரச ஆணைகளை வெளியிடுகிறார். அவர் பூமியில் தனது திட்டத்தை நிறைவேற்ற ஆவிக்குரிய சிருஷ்டிப்புகளை வழிநடத்துகிறார். சில சமயங்களில், அவர் விசேஷமாகத் தேர்ந்தெடுத்த மனிதர்களுக்கு தரிசனங்கள் மூலம் தனது அரண்மனைக்கு வரும் கிருபையை வழங்கி, தமது சேவையில் அவர்களை நியமிக்கிறார். அவர் தனது பரலோக நீதிமன்றத்தில் குற்றம் செய்தவர்களையும் குற்றமற்றவர்களையும் விசாரித்து தீர்ப்பளிக்கிறார், மேலும் அவருடைய நீதி மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் ஆவிக்குரிய சிருஷ்டிப்புகளையும் தனி மனிதர்களையும் தேசங்களையும் தண்டிக்கிறார். ஆனால் தேவனின் பரலோக நடவடிக்கைகள் அவருடைய ராஜ்யத்தை பரலோகத்தில் வழிநடத்துவதில்லை. அவர் தனது சிருஷ்டிப்பின் கீழ் மண்டலங்களில் – அதாவது பூமியிலும் சர்வாதிகாரமுடையவராக இருக்கிறார்.

வானத்திலும் பூமியிலும் தேவனுக்கு இருக்கக்கூடிய அசைக்க முடியாத சர்வாதிகாரத்துவமே தேவனுடைய ராஜ்யம் என்று வேதவசனங்கள் பேசினாலும், இயேசுவும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பூமியில் உள்ள தேவனுடைய ராஜ்யத்தைக் குறிப்பிடும்போது, தேவனின் விரிவடைந்த ராஜ்யம் என்று நாம் அழைத்ததை அவர்கள் மனதில் வைத்திருந்தார்கள். இந்த பூமிக்குரிய மண்டலத்தில் தேவன் தனது ராஜ்யத்தை மனித வரலாறு முழுவதும் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதைக் காண முடியும்.

## விரிவடைந்த ராஜ்யம்

இப்போது நாம் கூறியது போல, தேவன் எப்போதும் சிருஷ்டிப்பை தன் முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார், எப்போதும் வைத்திருப்பார். ஆனால் தேவனின் விரிவடைந்த ராஜ்யம் என்பது வரலாறு முழுவதும் சிருஷ்டிப்பின் மீதான தனது சர்வாதிகாரத்துவத்தை தேவன் வெளிப்படுத்தும், காட்டும் அல்லது நிரூபிக்கும் ஒரு குறிப்பிட்ட வழியைக் குறிக்கிறது. தேவன் பரலோகத்தில் தனது அரசாட்சியை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை வேதம் உறுதிப்படுத்துகிறது, மேலும் வேதாகம எழுத்தாளர்கள் பூமியில் தேவன் தனது அரசாட்சியை எவ்வாறு விரிவு படுத்தினார் என்பதை விளக்குவதில் தங்கள் கவனத்தை செலுத்துகிறார்கள்.

தொடக்கத்தில் தேவன் ஏதேன் தோட்டத்தில் தனது அரசாட்சியை வெளிப்படுத்தினார். அவர் அந்த பரிசுத்தமான தோட்டத்தில் தாம் முதலில் சிருஷ்டித்த மனிதர்களை வைத்தார், பிறகு காணக்கூடிய தனது ராஜ்யத்தை உலகம் முழுவதும் விரிவுபடுத்தும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் தேவனுடைய அரச மற்றும் ஆசாரிய சாயலாக பூமியை நிரப்பி ஆள வேண்டும். ஆனால் சாத்தான் ஆதாமையும் ஏவாளையும் தவறாக வழிநடத்தி ராஜ்யத்தை பின்னடைவுக்கு எடுத்துச் சென்றான். அதற்கு பதிலளிக்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விதமாக, தேவன் தனது சிருஷ்டிப்பை சபித்தார், மேலும் மனிதகுலம் செய்ய வேண்டிய வேலையை கடினமாக்கினார். அவர் மனிதகுலத்தை, தேவனைச் சேவித்தவர்கள் மற்றும் தேவனுக்கு எதிரான சாத்தானின் கலகத்தில் இணைந்தவர்கள் என்று ஒன்றுக்கொன்று போட்டி போடும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்தார்.

இந்த கிளர்ச்சி வேதாகம வரலாறு முழுவதும் பல வடிவங்களை எடுத்து தேவனுடைய ராஜ்யத்திற்கு பல சவால்களைக் கொடுத்தது. ஆனால் தேவன் தன்னை எதிர்த்த அனைவருக்கும் எதிராக இறுதியில் வெற்றி பெறுவார் என்று வேதம் மீண்டும் மீண்டும் கூறுகிறது. பூமியை நிரப்புவதிலும் ஆள்வதிலும் அவரின் சாயலாக உள்ளவர்கள் வெற்றி பெறுவார்கள், மேலும் தேவனுடைய ராஜ்யத்தின் அதிசயங்கள் எல்லா இடங்களிலும் வெளிப்படும். அந்த நேரத்தில், எல்லா கலகங்களுக்கும் எதிரான தேவனின் வெற்றி மிகப் பெரியதாக இருக்கும், எல்லா சிருஷ்டியும் அவரை சிருஷ்டிப்பின் ராஜாவாக ஏற்றுக் கொள்ளும். அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியர் 2:10-11 இல் இவ்வாறு விவரிக்கிறார்:

> இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் (பிலிப்பியர் 2:10-11).

வரலாற்று குறிக்கோளின் இந்த மகிமையான தரிசனமே ”தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தி” என்று இயேசுவும் அவருடைய சீஷர்களும் அறிவித்த வெற்றியாகும்.

நற்செய்தி மற்றும் தேவனுடைய ராஜ்யம் இரண்டையும் பார்ப்பதன் மூலம் ராஜ்யத்தின் நற்செய்தியின் அடிப்படைக் கருத்தை இப்போது உருவாக்கியுள்ளோம், தேவனுடைய ராஜ்யத்தினுடைய வெற்றியின் இந்த பிரகடன தனித்துவத்தை மேம்படுத்துவதற்கு நாம் தயாராக வேண்டும்.

## தனித்துவத்தை மேம்படுத்துதல்

ராஜ்யத்திற்கான வெற்றியின் நற்செய்தி புதிய ஏற்பாட்டு இறையியலுடன் முழுமையாக பிணைக்கப்பட்டுள்ளது, இது புதிய ஏற்பாட்டில் எல்லா இடங்களிலும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ தோன்றுகிறது. புதிய ஏற்பாடு எழுதப்பட்டபொழுது, தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் நம்பிக்கை மிகவும் தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது, அது புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு பரிமாணத்திற்குள்ளும் ஊடுருவியது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புதிய ஏற்பாட்டு இறையியலில் தேவனுடைய ராஜ்யத்தின் தனித்துவம் மேம்படுவதை நாம் கண்டுபிடிக்க பல வழிகள் உள்ளன, ஆனால் அதில் இரண்டு அம்சங்களை மட்டும் நம் நோக்கங்களுக்காகப் பார்ப்போம். முதலில் புதிய ஏற்பாட்டு நாட்கள் வரை இஸ்ரவேலின் தோல்விகளைப் பற்றி பார்ப்போம். இரண்டாவது, கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் ராஜ்யத்தின் மீது இஸ்ரவேல் கொண்டிருந்த நம்பிக்கையைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம். முதலில் இஸ்ரவேலின் தோல்விகளைக் குறித்து சிந்திப்போம்.

## இஸ்ரவேலின் தோல்விகள்

பாவம் சிருஷ்டிப்பையும் மனித இனத்தையும் ஒரு சாபத்தின் கீழ் கொண்டுவந்த பிறகு, ஆதாமுக்கும் ஏவாளுக்கும் முதலில் கொடுத்த ராஜ்யத்தின் கட்டளையை நிறைவேற்ற தேவன் ஆபிரகாமையும் அவனுடைய சந்ததியினரையும் தேர்ந்தெடுத்தார். ஆபிரகாமின் குடும்பத்தை பெருகப் பண்ணுவேன் என்று தேவன் வாக்குத்தத்தம் கொடுத்தார். உலகெங்கிலும் தேவனின் ஆசீர்வாதங்களை பரப்புவதற்கான தொடக்க புள்ளியாக ஆபிரகாமின் சந்ததியினருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைக் கொடுத்தார். மோசே மற்றும் யோசுவாவின் நாட்களில், கானானியர்களுக்கு எதிராகவும், கானானியர்கள் சேவை செய்த பிசாசின் ஆவிகளுக்கு எதிராகவும் இஸ்ரவேலர்களுக்கு தேவன் வெற்றியைக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாய்ப்புகளையும் பொறுப்புகளையும் தேவன் பெருக்கினார். பிற்காலத்தில், தாவீது, சாலொமோன் மற்றும் இஸ்ரவேல், யூதாவின் சில ராஜாக்கள் தேவனுடைய ராஜ்யத்தை மற்ற தேசங்களுக்கும் விரிவுபடுத்துவதில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றனர். உண்மையில், சாலொமோனின் ஆட்சியின் உச்சத்தில், இஸ்ரவேல் தேசம் உலகின் மிகப் புகழ்பெற்ற பேரரசுகளில் ஒன்றாக மாறியது.

இந்த வாய்ப்புகள் இருந்தபோதிலும், ஆபிரகாமின் சந்ததியினரின் ஒவ்வொரு தலைமுறையும் ஒரு விதத்தில் அல்லது வேறு விதத்தில் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்தனர். ஆனால் தேவன் அவர்களிடம் பொறுமையாக இருந்தார், அவர்கள் பாவம் செய்த போதிலும் அவர்கள் முன்னேறிச் செல்வதற்கு தேவன் அவர்களுக்கு உதவினார். தேவனின் ஜனங்கள் தங்கள் சொந்த ராஜ்யமாக, ஒரு அரச வம்சமாக மாறினார்கள், அவர்களின் தலைநகரில் ஒரு ஆலயமும் இருந்தது. வருத்தப்படும் விதமாக, இவையெல்லாம் இருந்தபோதிலும், இஸ்ரவேலின் தோல்விகள் மிகவும் வெளிப்படையாக இருந்ததால், தேவன் அவர்களுக்கு எதிராக நியாயத் தீர்ப்பை அனுப்பினார். இஸ்ரவேலை போரில் கைப்பற்ற அசீரியா மற்றும் பாபிலோன் ஆகிய பொல்லாத ராஜ்யங்களுக்கு தேவன் அழைப்பு விடுத்தார். கடைசியில் இத்தகைய மோசமான தோல்விகள் தாவீதின் வீட்டை அகற்றி, ஆலயத்தை இடித்து, எருசலேமை அழித்து, பெரும்பாலான இஸ்ரவேலரை நாடுகடத்தின. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் அழிவுக்குள்ளானது. பழைய ஏற்பாட்டின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முடிவில், தேவனுடைய ராஜ்யத்திற்காக செய்து முடிக்கப்பட்டவைகள் அனைத்தும் மறைந்துவிட்டன. புதிய ஏற்பாட்டின் நாட்களில், இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யம் புறஜாதி தேசங்களின் கொடுங்கோலாட்சியின் கீழும் 500 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் சேவை செய்த அந்நிய தேவர்களின் கீழும் பாதிக்கப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக, தற்கால கிறிஸ்தவர்கள் இந்த அனுபவங்களிலிருந்து தூரமாயிருக்கிறார்கள், பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த காரியத்தின் தோல்வி புதிய ஏற்பாட்டு இறையியலில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது நம்மில் பெரும்பாலோருக்குத் தெரிவதில்லை. ஆனால், புறஜாதி தேசங்களுக்கு இஸ்ரவேல் அடிபணிந்திருப்பது முதல் நூற்றாண்டில் வாழ்ந்த இயேசுவின் சீஷர்கள் உட்பட யூதர்களின் மனதில் பெரிய விஷயமாக இருந்தது. சிறைப்பிடிக்கப் பட்டு பிற நாடுகளுக்கு கொண்டுசெல்லப்படுவது தேவனின் காணக்கூடிய ராஜ்யத்தின் முடிவா? என்று முதல் நூற்றாண்டு யூதர்கள் ஆச்சரியப்பட்டார்கள். தேவனுடைய ராஜ்யத்திற்கு ஏதேனும் நம்பிக்கை மிகுந்த நற்செய்தி இருந்ததா? இந்த காலநிலை புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுடைய ராஜ்யம் முடிவுக்கு வரவில்லை என்பதை வலியுறுத்த வழிவகுத்தது. எல்லாம் இழக்கப்படவில்லை. சிறைப்பிடிக்கப்பட்டு பிற நாடுகளுக்கு கொண்டுசெல்லப்படுவது முடிவடையும் என்ற நற்செய்தியை நசரேனாகிய இயேசு அறிவித்தார். இஸ்ரவேலின் தோல்விகளின் மத்தியிலும், தேவனுடைய வெற்றிகரமான ராஜ்யமானது கிறிஸ்துவுக்குள்ளாக உலகம் முழுவதும் நிறுவப்படும்..

இஸ்ரவேலின் தோல்விகள் மூலம் ராஜ்யத்தின் தனித்துவம் மேம்படுத்தப்படுதலை இப்போது நாம் பார்த்தோம், இஸ்ரவேலின் சிறையிருப்பிற்குப் பின்னர் தேவனுடைய ராஜ்யத்திற்கான இஸ்ரவேலின் நம்பிக்கையைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## இஸ்ரவேலின் நம்பிக்கைகள்

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலின் உண்மையில்லாமை காரணமாக இஸ்ரவேல் சந்திக்கவிருக்கும் தோல்வி மற்றும் சிறைப்பிடிக்கப்படுதலை எச்சரிக்க தேவன் தனது தீர்க்கதரிசிகள் மூலம் பேசினார். ஆனால், அவர் தனது இரக்கத்தால், ஒரு பெரிய வெற்றியின் நம்பிக்கைக்கு நேராக அடிமைத்தனத்தில் இருந்தவர்களை மனந்திரும்ப அழைக்குமாறு தீர்க்கதரிசிகளையும் தூண்டினார். இந்த தீர்க்கதரிசனங்கள் சிக்கலானவைகளாக இருந்தன, ஆனால் பொதுவாக, தேவன் தனது எதிரிகளைத் தோற்கடித்து, தம்முடைய மகிமையான, உலகளாவிய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க தம் மக்களை விடுவிப்பார் என்கிற நம்பிக்கை இஸ்ரவேலுக்கு இருந்தது.

இந்த நம்பிக்கையை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தில் பல இடங்களில் காண முடியும், ஆனால் நேரத்தை மனதில் கொண்டு, ஏசாயா 52



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இல் உள்ள ஒரு பிரபலமான தீர்க்கதரிசனத்திலிருந்து இரண்டு வசனங்களை மட்டும் பார்ப்போம். முதலில், ஏசாயா 52:7 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: ”உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறார்!” என்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன (ஏசாயா 52:7).

இந்த வசனம் நமக்கு முக்கியமானது, ஏனெனில் இது தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் நற்செய்தியை வெளிப்படையாகக் குறிப்பிடுகிறது. இது ஏசாயா 40:9 க்கு இணையாக உள்ளது. இதற்கு ஒத்த ஒரு அறிக்கையை ஏசாயாவும் உருவாக்கினார். இந்த இரண்டு வேத பகுதிகளின் பெரிய சூழல்களும், “நற்செய்தி” என்பது இஸ்ரவேலர்களின் சிறையிருப்பைத் தொடர்ந்து தேவனுடைய ராஜ்யத்தின் முன் எப்போதும் இல்லாத ஒரு வெற்றியைக் குறிக்கிறது என்பதைக் காட்டுகிறது. இந்த நம்பிக்கையான கணிப்புகள் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்பான்மையான யூதர்களின் இறையியல் பிரதிபலிப்புகளுக்குள் நுழைந்தன. புதிய ஏற்பாட்டு இறையியலுக்குள்ளும் அவை நுழைந்தன என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

> பழைய ஏற்பாட்டின் மொத்த கதையும் யூதர்களுடைய சிறையிருப்பின் கருப்பொருளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டன. இது ஆதாம் மற்றும் ஏவாளுடன் மீண்டும் ஏதேன் தோட்டத்திற்குச் செல்கிறது, அது இஸ்ரவேலின் சொந்த வரலாற்றில் மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, பழைய ஏற்பாட்டின் கதைகளில் இவ்வளவு பெரியதாக இருக்கும் இந்த வகையான துக்கமான நிகழ்வுகள் இயல்பாகவே சிறையிருப்புக்கு அப்பாற்பட்ட சில நம்பிக்கையின் விருப்பத்தைக் காட்டுகின்றன. ஆகவே, தேவன் தம் மக்களை மீட்டெடுப்பார் என்று ஏசாயாவில் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் நமக்கு உள்ளன, ஆனால் நீங்கள் அதை மீண்டும் சிருஷ்டிப்புடன் இணைக்கும்போது, நிலத்தை மட்டும் மீட்டெடுப்பது நமக்கு ஏற்கனவே ஆரம்பத்தில் ஏற்பட்ட சேதம், அல்லது ஆரம்பத்தின் சிறிது நேரத்திலே நடந்த சேதத்தை ஒருபோதும் சரிசெய்ய போதுமானதாக இருக்காது என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள்… எனவே, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் குறிப்பாக ஒரு திறமையான ராஜாவின் கையில் இஸ்ரவேலுக்கு தற்காலிக விடுதலையையும் அதுமட்டுமல்லாமல் தேவனுடைய மக்களின் அரச



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பிரதிநிதியிடமிருந்து நிரந்தர விடுதலையையும் பெறுவதற்கான ஏக்கத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் இயல்பானது.
>
> – Dr. சீன் மாக்டோனப்

ஏசாயா 52:7 யை கூர்ந்து கவனித்தால், தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றிக்கான இஸ்ரவேலின் நம்பிக்கைகள் தொடர்பான நான்கு அம்சங்களை காண முடியும்.

முதலாவது, சுவிசேஷகர்கள் சீயோனுக்கு “நற்காரியங்களைக் கொண்டு வருவார்கள்” என்றும் “நற்செய்தியைக் கொண்டு வருவார்கள்” என்றும் ஏசாயா சொன்னார். இந்த இரண்டு சொற்றொடர்களும் எபிரெய வினைச்சொல்லான *பசாரை* மொழிப்பெயர்க்கின்றன, பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பு இதை *இவங்கலிசோ*வுடன் மொழிப்பெயர்க்கிறது. நாம் முதலில் பார்த்தது போல, இதே சொற்கள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் நற்செய்தியைக் குறிக்க பயன்படுத்தப்படுகின்றன.

இரண்டாவது, ரோமர் 10:15 இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ள ஏசாயா 52:7 யைக் காண்கிறோம். இஸ்ரவேலின் சிறையிருப்பின் முடிவில் சுவிசேஷகர்கள் நற்செய்தியை அறிவிப்பார்கள் என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை கிறிஸ்தவ பிரசங்கம் நிறைவேற்றியது என்பதை இங்கே பவுல் சுட்டிக்காட்டினார்.

மூன்றாவது, நற்செய்தி என்பது ”சமாதானம்” மற்றும் ”இரட்சிப்பின்” பிரகடனமாக இருக்கும் என்று ஏசாயா கணித்தார். எபேசியர் 6:15 இல், கிறிஸ்தவ “சமாதானத்தின் சுவிசேஷம்” என்று பவுல் குறிப்பிட்டார், எபேசியர் 1:13 இல் “உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷம்” என்று குறிப்பிட்டார்.

நான்காவது, இந்த வசனத்தின் கடைசி வரி நற்செய்தியை ”உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறார்” என்று சுருக்கமாகக் கூறுகிறது. இந்த செய்தி சுவிசேஷத்தின் அடித்தளத்தை உருவாக்குகிறது. அதாவது இயேசுவும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் ”ராஜ்யத்தின் நற்செய்தி” – அல்லது ”தேவனின்” – ஆட்சி என்று மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார்கள்.

ஏசாயா 52:7 இல் வரப்போகிற இஸ்ரவேலின் நம்பிக்கைகள் பற்றி ஏசாயா எவ்வாறு தீர்க்கதரிசனம் உரைத்தார் என்பதை இப்போது பார்த்தோம், அதே அதிகாரத்தின் 10 வது வசனத்தைப் பார்ப்போம். இங்கே, இஸ்ரவேல் பார்க்க விரும்பிய வெற்றியின் இரு பக்கங்களையும் ஏசாயா முன்னறிவித்தார். முதலாவது, தேவனுடைய எதிரிகளின் தோல்வியை அவர் எதிர்பார்த்தார்.

தேவனுடைய எதிரிகளின் தோல்வி ஏசாயா 52:10 இன் முதல் பாதியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஏசாயா இவ்வாறு சொன்னார்:

> எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார் (ஏசாயா 52:10).

கர்த்தர் ”தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார்” என்பதை இங்கே நாம் காண்கிறோம். இது போரில் எதிரிகளைத் தோற்கடிப்பதற்கான அவரது வலிமையைக் குறிக்கிறது.

பழைய ஏற்பாட்டை அறிந்த அனைவருக்கும் தேவன் எதிரிகளை பலமுறை தோற்கடித்தார் என்பது நன்றாகத் தெரியும். தேவனுடைய வெற்றியைப் பற்றிய இந்த கணிப்பை மிகவும் சிறப்பானதாக்குவது எது? இந்த வசனத்தில், தேவன் தம்முடைய எதிரிகளை “எல்லா ஜாதிகளும் பார்க்கும் வண்ணம்” தோற்கடிப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார். வேறு விதத்தில் கூறினால், இஸ்ரவேலின் சிறையிருப்புக்குப் பிறகு, தேவன் *எல்லா இடங்களிலும்* தனது எதிரிகள் அனைவரையும் *முற்றிலுமாக* தோற்கடிப்பார் என்று ஏசாயா கணித்தார். அவர் அவர்களை பெலனற்றுப் போகச் செய்வார், அவர்களை பூமியிலிருந்து அகற்றுவார், நித்திய தீர்ப்புக்கு அனுப்புவார்.

இரண்டாவது, ஏசாயா 52:10 இன் கடைசி பாதி, தேவனின் வெற்றி தேவனுடைய ஜனங்களை அவருடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்குள் கொண்டு செல்லும் என்று கூறுகிறது. ஏசாயா 52:10 இன் இந்த பகுதியைக் கவனியுங்கள்:

> பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் (ஏசாயா 52:10).

பழைய ஏற்பாட்டில் தேவன் தம் மக்களை மீண்டும் மீண்டும் விடுவித்தார் என்பது நமக்குத் தெரியும். ஆனால் ஏசாயா இங்கே தீர்க்கதரிசனமாக உரைத்த மீட்பில், *“பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாம்”* அதைக் காண்பார்கள் என்று உள்ளது. தேவனுடைய எதிரிகளின் தோல்வி உலகளாவியதாக இருப்பதைப் போலவே, அவருடைய மீட்பும் உலகளாவியதாகவும் இறுதியானதாகவும் இருக்கும். இறுதியில், தேவன் தம்முடைய ஜனங்களை சந்தோஷமும், அன்பும், நீதியானதும், அமைதியும், செழிப்பும் மற்றும் அவரது மகிமையான பிரசன்னத்தில் முடிவில்லாத மகிழ்ச்சியும் நிறைந்த தம்முடைய ராஜ்யத்தில் கொண்டு சேர்ப்பார்.

தேவனுடைய வெற்றியின் இந்த இரண்டு அம்சங்களையும் நாம் இன்னும் தெளிவாக நம் பாடத்தில் பின்னர் பார்ப்போம், ஆனால் இந்த வசனங்கள் விளக்குவது போல், வரவிருக்கும் ராஜ்யத்தைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன.

2,000 ஆண்டுகளுக்கும் மேலாக, பாரம்பரிய கிறிஸ்தவ இறையியல் புதிய ஏற்பாட்டில் ராஜ்யத்தின் முக்கியத்துவத்தை துரதிர்ஷ்டவசமாக மறைத்துவிட்டது. சபை வரலாற்றில் வெவ்வேறு காலங்களில், கிறிஸ்தவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் விதமாக பல்வேறு இறையியல் கண்ணோட்டங்களை சரியாக வலியுறுத்தி வந்துள்ளனர். ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்டபோது, தேவனுடைய ராஜ்யத்தின் தோல்வி இயேசுவின் சீஷர்களைப் பெரிதும் கலங்க வைத்தது என்பதை நாம் எப்போதும் நமக்கு நினைவூட்டிக் கொள்ள வேண்டும். தேவனுடைய ராஜ்யமானது இயேசுவில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை விட வேறு எதுவும் அவர்களுக்கு முக்கியமில்லாமல் இருந்தது. புதிய ஏற்பாட்டு இறையியலானது தேவனுடைய ராஜ்யத்தின் நற்செய்தி கட்டமைப்பிற்குள் இந்த காரணத்திற்காகத் தான் வைக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய இந்த பாடத்தில் இதுவரை, புதிய ஏற்பாட்டு இறையியல் ராஜ்யத்தினுடைய நற்செய்தியின் முக்கிய கருப்பொருளை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இப்போது, நம்முடைய இரண்டாவது முக்கிய தலைப்பான, 'ராஜ்யத்தின் வருகை புதிய ஏற்பாட்டின் இறையியலை எவ்வாறு வடிவமைத்தது' என்பதற்கு நேராக நாம் திரும்ப வேண்டும்.

# வருகை

சில விஷயங்கள் நடக்கப்போகின்றன என்று நாம் நம்பிய நேரங்கள் நம் அனைவருக்கும் இருந்திருக்கும். ஆனால் நேரம் வந்தபோது, உண்மையில் நடந்தது நாம் நினைத்ததிலிருந்து மிகவும் வித்தியாசமானதாக இருந்தது. பல வழிகளில் இது புதிய ஏற்பாட்டு எழுதத்தாளர்களுக்கும் பொருந்தும். முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்பான்மையான யூதர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றி எவ்வாறு வரப்போகிறது என்பதில் உறுதியான எதிர்பார்ப்புகள் இருந்தது. ஆனால் இயேசுவின் ஆரம்பகால சீஷர்களுக்கு தாங்கள் கற்பனை செய்தபடி நடப்பதில்லை என்பது படிப்படியாக புரிந்தது. ஆகையால், பல்வேறு வழிகளில், ராஜ்யத்தின் வெற்றி உண்மையில் எவ்வாறு வரப்போகிறது என்பதை விளக்குவதே புதிய ஏற்பாட்டு இறையியலின் முக்கிய நோக்கமாக இருந்தது.

ராஜ்யத்தின் வருகை புதிய ஏற்பாட்டு இறையியலில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைப் புரிந்துகொள்ள, தேவனுடைய ராஜ்யத்தின் வருகைக்கான எதிர்பார்ப்புகளை முதலில் பார்ப்போம். ராஜ்யத்தின் மூன்று மடங்கு வெற்றி என்று நாம் அழைப்பதைப் பற்றிய புதிய ஏற்பாட்டின் கண்ணோட்டத்தைப் பார்ப்போம். வரப் போகும் ராஜ்யத்திற்கான எதிர்பார்ப்புகளை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# எதிர்பார்ப்புகள்

கி. பி. முதல் நூற்றாண்டில், அனைத்து யூதர்களும் தங்கள் மூதாதையர்களின் நம்பிக்கையில் ஒரு சிறிய அளவிலான அர்ப்பணிப்பையாவது கொண்டிருந்தனர், மேலும் வெற்றிகரமான தேவனுடைய ராஜ்யம் வர வேண்டும் என்று எதிர்பார்த்து இருந்தார்கள். தேவன் தங்கள் எதிரிகளைத் தோற்கடித்து, அவருடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க அவருடைய மக்களை இரட்சிப்பார் என்று அவர்கள் அனைவரும் நம்பினார்கள். இயேசுவைப் பின்பற்றினவர்களுக்கும் இது பொருந்தும். ஆனால் தேவனுடைய வெற்றிகரமான ராஜ்யம் எப்படி வரும் மற்றும் எப்போது வரும் என்று அவர்கள் எதிர்பார்த்த விதத்தில் சில வேறுபாடுகள் இருந்தன.

ஒருபுறம், இஸ்ரவேலில் உள்ள மத குருமார்களும் பிற தலைவர்களும் தேவனுடைய ராஜ்யத்தின் இறுதி வெற்றியைப் பற்றி கற்பித்தபோது, தங்களுக்குத் தெரிந்த பழைய ஏற்பாட்டு சொற்களான “கடைசி நாட்கள்” மற்றும் “கர்த்தருடைய நாள்” போன்றவற்றைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அவர்கள் வரலாற்றின் இரண்டு பெரிய யுகங்களைப் பற்றியும் பேசினார்கள். பாவம், துன்பம் மற்றும் மரணம் ஆகியவை இருக்கிற தற்போதைய காலத்தை ”இந்த யுகம்” – என்று மத குருமார்கள் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள் – எபிரெய மொழியில் *ஒலாம் ஹாசா* என்று இதற்குப் பெயராகும், மேலும் எதிர்காலத்தில் நீதியும், அன்பும், மகிழ்ச்சியும், சமாதானமும் இருக்கிற சிறையிருப்பைத் தொடர்ந்து வரும்காலத்தை “வரவிருக்கும் யுகம்” என்று குறிப்பிடுகிறார்கள் – எபிரெய மொழியில் இதற்கு *ஒலாம் ஹபா’* என்று பெயராகும்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து இஸ்ரவேல் சிறைப்பட்டுப் போன சாபத்தில் “இந்த யுகம்” மிக மோசமான நிலையை அடைந்தது என்று அவர்கள் கற்பித்தார்கள். தேவன் இந்த யுகத்தின் மேல் சர்வாதிகாரியாக இருந்தார், அவ்வப்போது அவர் தனது ராஜ்யத்தை குறிப்பிடத்தக்க வழிகளில் வெளிப்படுத்தினார். ஆனால் கி. பி முதல் நூற்றாண்டில் தேவனுடைய ஜனங்கள் ஒடுக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். “வரவிருக்கும் யுகத்தில்” தேவனுடைய விரோதிகள் முற்றிலுமாக தோற்கடிக்கப்பட்டு பூமியிலிருந்து அகற்றப்படுவார்கள் என்பதே பரவலான எதிர்பார்ப்பாகும். தேவனுடைய ஜனங்கள் அவரின் உலகளாவிய ராஜ்யத்தின் அளவிட முடியாத ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்காக என்றென்றுமாக மீட்கப்படுவார்கள்.

> வேதாகம இலக்கியத்திலும், வேதத்தைப் பற்றிய கலந்துரையாடலிலும், சில சமயங்களில் “இந்த யுகம்” மற்றும் “வரவிருக்கும் யுகம்” என்ற சொற்களைக் காண்கிறோம். இந்த பதங்களின் அர்த்தம் என்ன என்பதைப் பார்ப்போம்: “இந்த யுகம்” என்பது மனிதர்கள் வாழும் காலப்பகுதி, காலம், சகாப்தம், மனிதன் பாவத்தில் விழுந்ததிலிருந்து இருக்கிற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> யுகம் ஆகியவற்றைக் குறிக்கும். பாவத்தால் விழுந்து போன உலகில் இருக்கிற வாழ்க்கை. “வரவிருக்கும் யுகம்” என்பது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எதிர்பார்த்தபடி தேவன் பரதீசுவை ஏதோவொரு வகையில் மறுகட்டமைக்கும் காலம் ஆகும்; ஒரு புதிய வானமும் புதிய பூமியும் இருக்கும், மேலும் கல்லால் ஆன மனித இருதயம் அகற்றப்படும், நாம் அனைவரும் தேவனுடைய சித்தத்தை முழுமையாகப் பின்பற்றுவோம். மனிதர்களிடையே வன்முறை இருக்காது; விலங்குகளின் ராஜ்யத்திலும் கூட வன்முறை இருக்காது.
>
> – Dr. எக்கார்ட் ஜே. ஸ்க்நாபெல்

முதல் நூற்றாண்டில், வரலாறானது ”இந்த யுகத்திலிருந்து” ”வரவிருக்கும் யுகத்திற்கு” மாறுவதற்கு முன்பு என்னவெல்லாம் நடக்க வேண்டும் என்பதில் வெவ்வேறு யூத பிரிவுகள் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தன. ஆனால் தோல்வியுற்ற இந்த யுகத்திலிருந்து தேவனுடைய வெற்றிகரமான ராஜ்யத்தின் யுகத்திற்கு மாறுவது ஒரு பேரழிவை உண்டுபண்ணும் யுத்தத்தின் மூலம் நிகழும் என்று பெரும்பாலான பிரிவுகள் நம்பின. தாவீதின் சிங்காசனத்தின் வாரிசான மேசியா பரலோகத்தில் இருக்கிற தேவதூதர்களையும் தேவனின் உண்மையுள்ள ஜனங்களையும் வழிநடத்தி தன் மனித எதிரிகளையும் ஆவிக்குரிய எதிரிகளையும் வெற்றி கொள்வார் என்று அவர்கள் நம்பினார்கள்.

தேவன் மனித எதிரிகளை மட்டுமல்ல, ஆவிக்குரிய எதிரிகளையும் தோற்கடிப்பார் என்கிற நம்பிக்கைக்கு பழைய ஏற்பாடு முழுவதும் வேத வசனங்கள் ஆதாரமாக இருக்கின்றன. யாத்திராகமம் 12:12 இல் தேவன் எகிப்தியர்களை மட்டுமல்ல, எகிப்தியர்களின் தேவர்களையும் தோற்கடிப்பதைப் பற்றி பேசினார் என்பதை உதாரணமாக கூறலாம். 1 சாமுவேல் 5:1-12 இல் தேவன் பெலிஸ்தர்களுடன் போரிட்டார், அவர்களுடைய தேவனான தாகோனையும் தோற்கடித்தார். இதனால்தான் ஏசாயா 21:9 பாபிலோனின் தோல்வியை பாபிலோனில் உள்ள தேவர்களின் அழிவுடன் இணைத்தது.

ஆகாய் 2:6-9; சகரியா 9–12 மற்றும் எசேக்கியேல் 38–39 ஆகிய வேத பகுதிகள் கடைசிகாலம் பற்றிய யூத இலக்கியத்தில் தீர்க்கதரிசனங்களாக விளக்கப்பட்டன, அதில் ஒரு உலகளாவிய போரில் மேசியா தேவனுடைய சேனைகளை பயன்படுத்தி தேசங்கள் மற்றும் அவர்கள் மீது ஆட்சி செய்த தீய ஆவிகளை முறியடித்து வெற்றி பெறுவார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த விதத்தில் மேசியா தேவனுடைய எதிரிகள் அனைவரையும் தோற்கடிப்பார், மேலும் தேவனுடைய ஜனங்கள் அனைவரையும் அவருடைய புகழ்பெற்ற, உலகளாவிய ராஜ்யத்திற்கு செல்ல விடுவிப்பார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மறுபுறம், பரவலாக இருக்கும் இந்த யூதக் கண்ணோட்டங்களைப் போலவே, இயேசுவின் *சீஷர்கள்* தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் வருகையை வித்தியாசமாக எதிர்பார்க்கத் தொடங்கினர். அவர்களின் சமகாலத்தவர்களில் பெரும்பாலானோரைப் போலவே, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் வரலாறு இரண்டு பெரிய யுகங்களாகப் பிரிக்கப்பட்டதாக நம்பினர். மேசியா தேவனுடைய மனித மற்றும் ஆவிக்குரிய எதிரிகளை தோற்கடித்து, தேவனின் மீட்கப்பட்ட ஜனங்களை “இந்த யுகத்திலிருந்து” “வரவிருக்கும் யுகத்தின்” ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கு மீட்டெடுப்பார் என்று அவர்களும் நம்பினர். ஆனால் இயேசுவின் சீஷர்கள் இந்த யுகத்திலிருந்து வரவிருக்கும் யுகத்திற்கு மாறுவது அவர்களின் நாளில் பெரும்பாலான யூதர்கள் நம்பியதற்கு மாறான வழிகளில் நடக்கும் என்று நம்பினர்.

முதலில், பெரும்பாலான யூதர்களைப் போலல்லாமல், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் *இயேசுவை* வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட தாவீதின் குமாரன் என்றும், அவர் தேவனுடைய ராஜ்யத்திற்கான உலகளாவிய இறுதி வெற்றியைக் கொண்டு வருவார் என்றும் நம்பினார்கள். மேசியாவாக இயேசுவை அவர்கள் ஏற்றுக்கொண்டதன் விளைவாக, அவர்கள் புதிய ஏற்பாட்டில் எழுதிய அனைத்தையும் ஆழமாக வடிவமைத்தனர்.

இயேசுவின் மேசியா அரசாட்சிக்குள் அவர்கள் தங்களை அர்ப்பணித்ததை புதிய ஏற்பாடு அவருக்குக் கொடுக்கும் அரச பட்டங்களில் நாம் காண முடியும். உதாரணமாக, புதிய ஏற்பாடு இயேசுவை “கிறிஸ்து” என்ற அரச பட்டத்தால் 529 முறை குறிக்கிறது. *கிறிஸ்டோஸ்* என்ற கிரேக்க வார்த்தை பழைய ஏற்பாட்டின் எபிரெய வார்த்தையான *மேஷியா*வை மொழிப்பெயர்க்கிறது, அதில் இருந்து மேசியா என்ற வார்த்தையை நமக்கு கிடைத்தது. உண்மையில், இந்த சொற்கள் வெறுமனே ”அபிஷேகம் செய்யப்பட்ட” என்ற அர்த்ததம் கொண்டவை. பழைய ஏற்பாட்டு காலங்களில், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் ராஜாக்கள் இஸ்ரவேலில் விசேஷமாக அபிஷேகம் செய்யப்பட்டவர்களாக இருந்தனர். ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில், ”அபிஷேகம் செய்யப்பட்டவர்” அல்லது ”மேசியா” என்பது தாவீதின் வீட்டில் இருந்து வரும் பெரிய ராஜாவுடன் கிட்டத்தட்ட ஒத்ததாக இருந்தது, அவரின் மூலமே வரவிருக்கும் யுகத்திற்கான மாறுதல் வரும்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்குக் வழங்கப்பட்ட இரண்டாவது அரச பட்டம் “தேவனுடைய குமாரன்” என்பதாகும். இந்த பயன்பாடு, அல்லது இதிலிருந்து சிறிது மாறுபடும் “குமாரன்” அல்லது “உன்னதமானவரின் குமாரன்” போன்ற பயன்பாடுகள் புதிய ஏற்பாட்டில் சுமார் 118 முறை வருகின்றன. இந்த பதம் இயேசு இஸ்ரவேலின் உண்மையான ராஜா என்பதைக் குறிக்கிறது. யோவான் 1:49 யைக் கவனியுங்கள், அங்கு நாத்தான்வேல் இயேசுவை நோக்கி இவ்வாறு சொன்னார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான் (யோவான் 1:49).

மத்தேயு 16:16 இல் பேதுரு இயேசுவில் விசுவாசம் வைத்ததை அறிக்கை செய்த போது இவ்வாறு சொன்னார்:

> நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து (மத்தேயு 16:16).

இந்த பயன்பாடு இயேசுவின் மூன்றாவது அரச பெயரான "தாவீதின் குமாரனுக்கு" ஒத்ததாக இருந்தது. தாவீதின் சிங்காசனத்தில் இருக்கப்போகும் உரிமைமிக்க, தேவனால் நியமிக்கப்பட்ட வாரிசு என்று இயேசுவை மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரின் சுவிசேஷ புத்தகங்கள் குறைந்தது 20 முறை குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

உதாரணமாக, லூக்கா 1:32-33 இல், காபிரியேல் தூதன் மரியாளிடம் இவ்வாறு அறிவித்தான்:

> [இயேசு] பெரியவர், உன்னதமானவரின் குமாரன் என்று அழைக்கப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார், அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது (லூக்கா 1:32-33).

இங்கே காபிரியேல் இயேசுவைப் பற்றி "உன்னதமானவரின் குமாரன்" என்ற அரச பட்டப் பெயருடன் பேசினார். இயேசு "தன் தகப்பனாகிய தாவீதின் சிங்காசனத்தில்" அமர்ந்திருப்பார் என்று அவர் விளக்கினார். இயேசு "என்றென்றும் அரசாளுவார்… [மற்றும்]அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" என்று லூக்கா பதிவு செய்தார். உன்னதமானவரின் குமாரனாக, தேவனுடைய ராஜ்யத்தின் இறுதியான மற்றும் முடிவில்லாத வெற்றியை இயேசு தான் கொண்டுவருவார்.

இந்த வேத பகுதிகள் அனைத்தும், "இயேசு தான் மேசியா, அவர் தேவனுடைய ராஜ்யத்தை பூரணமாக இந்த பூமிக்குக் கொண்டுவருவார்" என்று புதிய ஏற்பாட்டு இறையியலில் ஒரு முக்கியமான போதனையை சுட்டிக்காட்டுகின்றன.

இரண்டாவதாக, இயேசுவின் ஆரம்பகால சீஷர்கள், அவர்களும் மற்றவர்களும் எதிர்பார்க்காத வழிகளில் இந்த யுகத்திலிருந்து வரப்போகிற யுகத்திற்கான மாறுதலைக் கொண்டு வருவார் என்று நம்பினர்.

மத்தேயு 13:31-32 இல் தேவனுடைய ராஜ்யத்திற்கான எதிர்பார்ப்புகளின் மாற்றத்தை இயேசு வெளிப்படுத்திய விதத்தைக் கவனியுங்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவர் இங்கு **கூடி**யி**ருந்த** [மக்களுக்கு] இவ்வாறு சொன்னார் … "பரலோகராஜ்யம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும்" (மத்தேயு 13:31-32).

இந்த உவமையில், வெற்றிகரமான தேவனுடைய ராஜ்யமானது சிறியதாக, "கடுகு விதை போல" தொடங்கும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வளர்ந்து, *பின்னர்* அதன் இறுதி உச்சத்தை எட்டும் என்று இயேசு கற்பித்தார்.

பெரும்பாலும் நவீன இறையியலாளர்கள் தேவனுடைய மேசியா ராஜ்யத்தின் வருகையைப் பற்றிய இயேசுவின் கண்ணோட்டத்தை "தொடங்கிய கடைசி கால இறையியல்" என்று அழைக்கிறார்கள். இந்த சொற்றொடர் மேசியாவின் ஊழியம் என்னவென்பது பூமியில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தைக் குறிக்கிறது, ஆனால் *இறுதி* வெற்றி இனி தான் வர வேண்டும். அவர்கள் அதைக் குறித்து "ஏற்கனவே, ஆனால் இன்னும் இல்லை" என்று பேசுகிறார்கள். வேறு விதத்தில் கூறினால், தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றி *ஏற்கனவே* வந்துவிட்டது, ஆனால் *இன்னும்* முழுமையாக வரவில்லை. வரவிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றியைப் பற்றிய இந்த பார்வை புதிய ஏற்பாட்டு இறையியல் பற்றிய எண்ணற்ற நுண்ணறிவுகளை வழங்குகிறது.

> இது தற்போது யதார்த்தமாக நடக்கும் காரியமா? என்பது தான் தேவனுடைய ராஜ்யத்தை இயேசு அறிவிக்கும்போது தேவனுடைய ராஜ்யம் தொடர்பாக வருகிற மிகப்பெரிய கேள்விகளில் ஒன்றாகும். இது அவரது வார்த்தைகளிலும் செயல்களிலும் வந்திருக்கிறதா, அல்லது அது எதிர்காலத்தில் நிகழப் போகும் ஒன்றாக இருக்குமா? வல்லுநர்கள் "தொடங்கிய தேவனுடைய ராஜ்யம்" பற்றிப் பேசுகிறார்கள். "தொடங்கிய" என்பது தற்போதைய ராஜ்யத்தையும் எதிர்கால ராஜ்யத்தையும் குறிக்கிறது. இயேசு ராஜ்யத்தை அறிவிக்கிறார். அவருடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகளின் மூலம், குறிப்பாக சிலுவையில் அவர் மரித்ததன் மூலமும், உயிர்த்தெழுதலின் மூலமும் ராஜ்யம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ராஜ்யம் தொடங்கப்பட்டு விட்டது, ஆனால் அது இன்னும் நிறைவடையவில்லை. அது முழுமையாக நிறைவடையும் போது, அது பூரணமாக பூமிக்கு வரும், நம்முடைய மகிமைப்படுத்தப்பட்ட சரீரங்களைப் பெற்று, தேவனுடனான நித்திய உறவுக்குள் நுழைவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆகையால், நாம் இந்த நாளில், காலங்களுக்கு இடையிலும் ராஜ்யத்தின் தொடக்கம் மற்றும் நிறைவுக்கு இடையிலும் வாழ்கிறோம். நாம் இன்னும் இந்த சரீரங்களில் வாழ்கிறோம்; பாவத்தால் வீழ்ந்த இந்த உலகில் நாம் இன்னும் வாழ்கிறோம், ஆனாலும் கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் ஆட்சி செய்கிறதால் ராஜ்யம் வந்துவிட்டது. அவர் நம் இருதயத்திலும் ஆட்சி செய்கிறார். ராஜ்யம் வந்துவிட்டது, அது ”ஏற்கனவே” வந்து விட்டது, இருந்தாலும் அது இன்னும் எதிர்காலமாக இருக்கிறது. இது ”இன்னும் முழுமையடையவில்லை”.
>
> – Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

மொத்தத்தில், தேவனுடைய ராஜ்யம் வருவது பற்றிய புதிய ஏற்பாட்டின் பார்வையை மூன்று மடங்கு வெற்றியாக நினைக்க இது உதவுகிறது. முதலாவதாக, தொடக்கத்தில், இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரம் ஏறுதல் ஆகியவற்றின் மூலமாகவும், முதல் நூற்றாண்டில் அவருடைய அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அஸ்திபார ஊழியங்கள் மூலமாகவும் தேவன் தன் ராஜ்யத்தின் வெற்றியைத் தொடங்கினார். இதற்குப் பிறகு, தொடர்ச்சியாக, இயேசு தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றியை பரலோகத்தில் உள்ள சிங்காசனத்திலிருந்து தொடர்ந்தார். சபையின் வரலாறு முழுவதும் இயேசு தொடர்ந்து ராஜ்யத்தை முன்னெடுத்துச் செல்வார். இறுதியாக, இயேசு மகிமையில் திரும்ப வரும்போது ராஜ்யத்தின் நிறைவைக் கொண்டு வருவார். எல்லா தீமைகளும் அழிக்கப்பட்டு, தேவனுடைய மகிமையான ராஜ்யம் உலகில் எல்லா இடங்களிலும் விரிவடையும் போது, தேவனுடைய ராஜ்யத்தின் இறுதி வெற்றி நிகழும்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பல்வேறு வகையான இறையியல் விஷயங்களை விளக்குவதற்கு தங்களை அர்ப்பணித்ததால், இயேசுவின் மேசியா ஊழியத்தின் இந்த மூன்று நிலைகளின் அடிப்படையில் அவர்கள் பெருமளவில் அவ்வாறு விளக்கினர்.

நாம் பார்த்தது போல், ராஜ்யத்தின் வருகையானது முதல் நூற்றாண்டில் இருந்த இயேசுவின் சீஷர்களின் எதிர்பார்ப்புகளை மாற்றியது. புதிய ஏற்பாட்டு இறையியலில் தேவனுடைய ராஜ்யத்தின் மூன்று மடங்கு வெற்றியின் முக்கிய இடத்தைப் பற்றி இப்போது பார்ப்போம்.

## மூன்று மடங்கு வெற்றி

தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றி இயேசுவின் மேசியா ஊழியத்தின் துவக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவு ஆகியவற்றில் வருகிறது என்பது ஆரம்பகால சபையில் பல வகையான கேள்விகளை எழுப்பியது. இயேசு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்கனவே செய்து முடித்தது என்ன? சபை வரலாற்றில் அவர் என்ன செய்து முடிப்பார்? அவருடைய வருகையில் அவர் என்ன செய்வார்? முதல் நூற்றாண்டில் இந்த வகையான கேள்விகள் மிகவும் முக்கியமானவைகளாக இருந்தன. அவை புதிய ஏற்பாட்டின் இறையியலை ஆழமாக வடிவமைத்தன. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தேவனுடைய எதிரிகளின் தோல்வி மற்றும் தேவனுடைய மக்களை மீட்டெடுப்பது கிறிஸ்துவின் முதல் வருகையில் தொடங்கியது என்ற உண்மையின் அடிப்படையில் எழுதினர். இந்த சம்பவங்கள் சபை வரலாறு முழுவதும் தொடரும், கடைசியில் கிறிஸ்துவின் இரண்டாவது வெற்றிகரமான வருகையில் நிறைவடையும்.

இந்த மூன்று மடங்கு வெற்றி புதிய ஏற்பாட்டு இறையியலை எவ்வாறு வடிவமைத்தது என்பதற்கான சில வழிகளை சுட்டிக்காட்ட காலம் மட்டுமே நம்மை அனுமதிக்கும், ஆனால் அது இரண்டு திசைகளிலும் பார்ப்பதற்கு உதவும். ராஜ்யத்தின் மூன்று கட்டங்களில் தேவனுடைய எதிரிகளின் தோல்வியை புதிய ஏற்பாடு எவ்வாறு விளக்குகிறது என்பதைக் குறித்து முதலில் பார்ப்போம். பின்னர், மூன்று கட்டங்களிலும் தேவனுடைய மக்களை மீட்டெடுத்தல் குறித்த புதிய ஏற்பாட்டு போதனைகளை ஆராய்ந்து பார்ப்போம். தேவனுடைய எதிரிகளின் தோல்வியைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## தோல்வி

தேவனுடைய மனித எதிரிகளையும் ஆவிக்குரிய எதிரிகளையும் மேசியா தோற்கடிப்பார் என்று விசுவாசியாத யூதர்கள் நினைத்தார்கள். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் இதை நம்பினர். அதே நேரத்தில், இயேசு தம்முடைய ராஜ்யத்தின் ஒவ்வொரு கட்டத்திற்கும் பொருத்தமான வழிகளில் இதைச் செய்வார் என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

ராஜ்யத்தின் தொடக்கத்தில் இயேசுவின் வியூகம் இரு மடங்காக இருந்தது என்பதை புதிய ஏற்பாட்டு இறையியல் வலியுறுத்துகிறது. ஒருபுறம், தேவனின் நியாத்தீர்ப்பை அவருடைய ஆவிக்குரிய எதிரிகளுக்கு அவர் அளித்தார். இயேசு தாம் ஊழியம் செய்த நேரம் முழுவதும், அசுத்த ஆவிகளை தங்கள் அதிகார நிலைகளில் இருந்து துரத்துவதன் மூலம் அவைகளை பலம் இழக்கச் செய்தார். ஆனால் மறுபுறத்தில், அவர் தேவனுடைய இரக்கத்தை அவரின் மனித எதிரிகளுக்கு அளித்தார். நிச்சயமாக, ஜனங்களுக்குக் கிடைத்த கிறிஸ்துவின் இரக்கம் அவர்களுக்கு பல ஆசீர்வாதங்களைத் தந்தது, அதே நேரத்தில் அது அசுத்த ஆவிகளிடமிருந்து மனிதர்களை இரட்சிப்பதன் மூலம் அந்த அசுத்த ஆவிகளைத் தோற்கடித்தது.

மத்தேயு 12:28-29 இல், இயேசுவே இந்த வியூகத்தை விளக்கி இவ்வாறு சொன்னார்:

> நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வந்திருக்கிறதே… பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம் (மத்தேயு 12:28-29).

அவன் வீட்டைக் கொள்ளையடிப்பதற்காக," இயேசு வந்து பிசாசுகளைக் கட்டினார், அல்லது "பலவானை முந்திக் கட்டினார்." வேறு வார்த்தைகளில் கூறினால், இயேசு பிசாசுகளை துரத்தினார், அவைகளின் கட்டுப்பாட்டில் இருந்தவர்களை விடுவித்தார்.

யோவான் 12:31-32 போன்ற இடங்களில் இந்த இரு மடங்கு வியூகத்தை நாம் காணலாம். அங்கே இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போதுஎல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் (யோவான் 12:31-32).

மீண்டும், ராஜ்யத்தைப் துவங்கும்போதே, இயேசு நேரடியாக பொல்லாத ஆவிகளை அல்லது "இந்த உலகத்தின் அதிபதியாகிய" சாத்தானைத் தாக்கினார். அவர் அவனை துரத்தி, அதிகாரமிழக்கச் செய்தார். சாத்தானுக்கு இத்தகைய தண்டனையைக் கொடுத்ததல்லாமல், இயேசு மனிதகுலத்திற்கு இரட்சிப்பையும் வழங்கினார்.

> வெற்றிகரமான கிறிஸ்து என்கிற கிறிஸ்துவின் இந்த இயல்பு, நம்முடைய பாவங்களுக்காக மரித்து, பரிகாரம் செய்த கிறிஸ்து என்ற கருத்துடன் எவ்வாறு ஒத்துப்போகிறது அல்லது தொடர்புடையது? என்பதைக் குறித்து சில நேரங்களில் மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள் … யோவான் சுவிசேஷத்தில், வனாந்தரத்தில் சர்ப்பம் உயர்த்தப்பட்டது போல, மனுஷகுமாரன் உயர்த்தப்பட்டதைப் பற்றி இயேசு மூன்றாவது முறையாக பேசுகிறார் – அது யோவான் 12 இல் உள்ளது – அப்படி உயர்த்தப்படுதலை "இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்கிற அறிக்கையுடன் அவர் இணைக்கிறார். ஆகவே, சபிக்கப்பட்ட சர்ப்பத்தின் இடத்தை இயேசு எடுத்துக்கொள்கிறார், மரணத்தை உள்ளிருந்து அழிக்க அவர் மரணமடையச் செல்கிறார். ஆகவே, சிலுவையில் உயர்த்தப்படுவதன் மூலம் மரணத்தை உள்ளிருந்து அழிப்பதே வெற்றிகரமான கிறிஸ்துவாக அவர் செய்த முதல் செயல் ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

– Rev. மைக்கேல் ஜே. குளோடோ

தேவனுடைய ஆவிக்குரிய எதிரிகளின் தோல்வி கிறிஸ்துவின் தொடக்க ஊழியத்துக்கு மிகவும் முக்கியமானது, ஆகையால், எபிரெயர் 2:14-15 போன்ற வேத பகுதிகளில், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதே இரு மடங்கு வியூகத்தின் அடிப்படையில் சிலுவையில் கிறிஸ்துவின் பரிகார மரணத்தைப் பற்றி எழுதினார்கள். இயேசு தனது மரணத்தின் மூலம், சாத்தான் மனிதர்கள் மீது வைத்திருந்த அதிகாரத்தை உடைத்தார் என்பதை அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். மனிதகுலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்ததன் மூலம், பாவத்திற்கும் மரணத்திற்கும் அடிமைகளாக இருந்த மக்களை இயேசு விடுவித்தார்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய கொலோசெயர் 2:15 இல் இந்த கருத்துக்கள் தெளிவாகக் காணப்படுகின்றன:

> துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, [கிறிஸ்து] வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (கொலொசெயர் 2:15).

சிலுவையில் மரித்ததன் மூலம் இயேசு தம் ஜனங்களை பாவத்தின் ஆளுமையிலிருந்து விடுவித்தபோது பிசாசின் துரைத்தனங்களும் அதிகாரங்களும் தங்கள் முக்கியத்துவங்களை இழந்தன.

இந்த வெளிச்சத்தில் பார்க்கும்போது, எபேசியர் 4 : 8 இல், சாத்தானின் ஊழியக்காரர்களாக இருந்த மனிதர்கள் அவனிடமிருந்து கொள்ளையடிக்கப்படுவதாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரம் ஏறுதல் விவரிக்கப்படுவதில் எந்த ஆச்சரியமுமில்லை:

> அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் (எபேசியர் 4:8).

இந்த வேத பகுதி குறிப்பிடுவது போல, ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, கிறிஸ்து அவர்களை சாத்தானின் ராஜ்யத்திலிருந்து கொள்ளையடிப்பதாக இதன் அர்த்தம் உள்ளது.

தேவனுடைய ஆவிக்குரிய எதிரிகளைத் தோற்கடிப்பதற்கான இந்த வியூகம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களின் தொடக்க ஊழியத்திலும் காணப்படுகிறது. இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, புறஜாதியார் தேசங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோதும், பிசாசு பிடித்திருந்த பல மனித ஊழியர்களிடமிருந்து சாத்தானை துரத்தியபோதும் அப்போஸ்தலர்கள் பலமுறை பிசாசுகளை துரத்தினார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆச்சரியப்படாத வகையில், சபை வரலாறு முழுவதும் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியைக் கருத்தில் கொள்ளும்போது , ராஜ்யத்தின் தொடக்கத்தில் இயேசு பயன்படுத்திய வியூகத்தை கிறிஸ்துவின் சீஷர்கள் பின்பற்ற வேண்டியிருக்கிறது என்பதை காணலாம். தேவனுடைய *மனித* எதிரிகளுக்கு எதிராக வெற்றியைப் பெறுவதற்குப் பதிலாக, அவரின் வழிகளை எதிர்க்கும் பொல்லாத ஆவிகள் மீது நம் கவனத்தை செலுத்த வேண்டும்.

பல நவீன கிறிஸ்தவர்கள் அதை உணரத் தவறிவிட்டாலும், புதிய ஏற்பாட்டு ராஜ்ய இறையியல் இயேசுவின் சபை போரிட வேண்டியது மக்களுடன் இல்லை, மாறாக சாத்தான் மற்றும் மற்ற பொல்லாத ஆவிகளுடன் என்பதை அடிக்கடி நமக்கு நினைவூட்டுகிறது. தேவனுடைய இந்த ஆவிக்குரிய எதிரிகளுடன் போராட வேண்டியது நமது பொறுப்பாகும்.

இதனால்தான், எபேசியர் 6:11-12 போன்ற வேத பகுதிகளில், புதிய ஏற்பாடு நம்முடைய சிரமங்களையும் போராட்டங்களையும் பொல்லாத ஆவிகளுடனான போராட்டங்கள் என்று வியாக்கியானம் செய்கிறது. இங்கே நாம் வாசிக்கிறோம்:

> நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படிதேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:11-12).

இப்போதுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையின் போராட்டங்களை வெறும் மனிதர்களுடனான மோதலாகவே கருதுகின்றனர். ஆனால் சபை எதிர்கொள்ளும் பிரச்சனை உண்மையில் “பிசாசோடும்,” “துரைத்தனங்களோடும்,” “அதிகாரங்களோடும்,” “இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும்,” “வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்” இருப்பதை இங்கே காண்கிறோம். தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்வதன் மூலம், தேவனுடைய ராஜ்யத்தை எதிர்க்கும் இந்த ஆவிகளை மேற்கொள்ள முடியும்.

கிறிஸ்தவ வரலாறு முழுவதும் ஆவிக்குரிய போராட்டம் என்பது கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் பரிமாணம் என முக்கியத்துவம் கொடுப்பதற்கு இந்த வேத பகுதி வழக்கத்திற்கு மாறான ஒன்றல்ல. எபேசியர் 4:27; 1தீமோத்தேயு 3:7; 2 தீமோத்தேயு 2:26; யாக்கோபு 4:7; 1 பேதுரு 5:8; 1 யோவான் 3:8; மற்றும் யூதா 9 ஆகிய வேத பகுதிகளிலும் சாத்தான் மற்றும் பிற பொல்லாத



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆவிகளுடன் நமக்கு உள்ள நிலையான போராட்டம் காணப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில், 2 கொரிந்தியர் 5:20 இல் வாசிப்பது போல, தேவனுடைய இரக்கத்தை நாம் அவருடைய மனித எதிரிகளுக்கும் காண்பிக்க வேண்டும்.

> ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று: கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம் (2 கொரிந்தியர் 5:20).

பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றி, "கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக", தேவனுடைய ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக, தேவனையும் அவருடைய *மனித* எதிரிகளையும் ஒப்புரவாக்குவதன் மூலம் தேவனுடைய *ஆவிக்குரிய* எதிரிகளைத் தொடர்ந்து தோற்கடிப்போம்.

புதிய ஏற்பாட்டு இறையியல் தேவனுடைய எதிரிகளின் தோல்வியை கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவு பெறுதலுடன் தொடர்புபடுத்துகிறது. எப்படியிருந்தாலும், ராஜ்யத்தின் நிறைவில் இயேசுவின் வியூகத்தில் ஒரு வியத்தகு மாற்றம் நிகழும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். கிறிஸ்து திரும்பி வரும்போது, தேவனுடைய மனித எதிரிகளுக்கு மேலும் இரக்கங்காட்ட மாட்டார். அதற்கு பதிலாக, தேவனுடைய ஆவிக்குரிய எதிரிகளுக்கும் மனித எதிரிகளுக்கும் எதிராக போரிட்டு அவர்களை முழுமையாக தோற்கடித்து, பூமியிலிருந்து அவர்களை நீக்கி, நித்திய நியாத்தீர்ப்பைக் கொண்டுவருவார்.

வெளிப்படுத்தின விசேஷம் 19:13-15 தேவனுடைய மனித எதிரிகளின் தோல்வியை விவரிக்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை ஆகும். பரலோகத்திலுள்ள சேனைகள் அவரைப் பின்தொடர்ந்தன … புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 19:13-15).

அதுபோலவே, வெளிப்படுத்தின விசேஷம் 20:10, கிறிஸ்துவின் மகிமையான வருகையை பொல்லாத ஆவிகளுக்கும் சாத்தானுக்கும் எதிரான கடைசி நியாயத்தீர்ப்பின் நேரமாக சித்தரிக்கிறது:

> மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் இந்த விஷயங்களை மிகவும் சுருக்கமாக மட்டுமே தொகுத்துள்ளோம். ஆனால் இந்த உதாரணங்களிலிருந்து புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் ராஜ்யத்தின் வெற்றியின் இந்த அம்சத்தை மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்துவது அவசியம் என்று உணர்ந்ததை நாம் காண முடிகிறது. பொல்லாத ஆவிகளுக்கு எதிரான ஆக்கிரமிப்புக்கு முன்னுரிமை தரப்பட அவர்கள் வலியுறுத்தினர், மேலும் ராஜ்யத்தின் தொடக்கம் மற்றும் தொடர்ச்சியின் போது தேவனால் மனித எதிரிகள் இரக்கம் காட்டுப்படுவதை அழுத்தமாகக் கூறினார்கள். ஆனால், கடைசியில், கிறிஸ்து திரும்பி வரும்போது, மனித எதிரிகளும் ஆவிக்குரிய எதிரிகளும் தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பின் கீழ் வருவார்கள் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். புதிய ஏற்பாட்டு ராஜ்ய இறையியலில் தேவனுடைய எதிரிகளின் தோல்வி ஒரு முக்கிய அம்சமாகும் என்பதை இந்த வலியுறுத்தல்கள் உறுதிப்படுத்துகின்றன.

> ராஜ்யம் தொடங்கி விட்டது, அது இங்கே இருக்கிறது, ஆனால் அது இன்னும் அதன் வழியை வளர்த்துக் கொண்டிருக்கிறது, இது நிறைவு பெறும் வரையில் அதன் வழியை உருவாக்குகிறது. ஆகையால், எந்த வழிகளில், இயேசு ஏற்கனவே தனது எதிரிகளை வென்றிருக்கிறார்? என்கிற கேள்வி எழுகிறது, எல்லாவற்றுக்கும் முதலாக, மிக முக்கியமான வெற்றி சிலுவையிலேயே இருக்கிறது, அதனால் அவர் சாத்தானைத் தோற்கடித்தார்… அந்த வகையில், முக்கியமான போர் போராடி வெல்லப்பட்டு விட்டது. அதனால்தான், எடுத்துக்காட்டாக, வெளிப்படுத்தின விசேஷம் 12 இல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் என்று சகோதரர்களை குற்றம் சாட்டுகிறவனுக்கு பரிசுத்தவான்கள் பதிலளிக்கிறார்கள். ஆகையால் போரானது ஏற்கனவே வெல்லப்பட்டு விட்டது. ஆனால், இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஹிட்லரைப் போல, போர் முடிந்து விட்டது என்பதை கண்ட பிறகும் கூட, அவன் விலகவில்லை. அவனுடைய நேரம் குறைவு என்று தெரிந்ததால் அவன் கோபத்தால் நிறைந்தவனாக மாறினான். சாத்தானைப் பற்றியும் அதுதான் கூறப்படுகிறது. ஆகையால், சாத்தான் இப்போது மிகவும் வீரியமானவனாக இருக்கிறான், ஒவ்வொரு முறை சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போதும், அதிகமான மக்கள் மனந்திரும்பும்போதும், தனிப்பட்ட வாழ்க்கையில், உள்ளூர் சபையில், எந்தவொரு துணைக் கலாச்சாரத்தில் நீதி நிலைநாட்டப்படும்போதும், இது சாத்தான் மற்றும் இருளை நேசிப்பவர்களின் தொடர்ச்சியான தோல்வியை காட்டுகிறது. இந்த உலகத்தின் ராஜ்யங்கள் நம் தேவன் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவருடைய கிறிஸ்துவின் ராஜ்யங்களாக மாறுவது என்பது தான் இறுதி வெற்றியை நோக்கிய இறுதிப் பாதை ஆகும். மேலும் அவர் என்றென்றும் அரசாளுவார். பிலிப்பியர் 2 கூறுவது போல, இந்த பாதை அமைக்கப்பட்டுள்ளது. முழங்கால் யாவும் முடங்கும், எல்லா நாவும் இயேசுவே கர்த்தர் என்று அறிக்கை பண்ணும், அடிப்படை வெற்றி கிடைத்து விட்டது. அது இன்னும் சில காரியங்களில் செயல்பட வேண்டியுள்ளது. ஆவியின் வல்லமையால், முழங்காலை மடக்கி, மகிழ்ச்சியுடன் பலருடைய வாழ்க்கையில் இது நடந்துள்ளது. ஆனால் கடைசி நாளில் எல்லோரும் முழங்காலை முடக்குவார்கள்.
>
> – Dr. டி. ஏ. கார்சன்

தேவனுடைய ராஜ்யத்தின் மூன்று மடங்கு வெற்றியில் தேவனுடைய எதிரிகளின் தோல்வி இருக்கிறது என்பதை இப்போது நாம் பார்த்தோம், புதிய ஏற்பாட்டு இறையியலில் தேவனுடைய ஜனங்களின் மீட்பும் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டும்.

## மீட்பு

ராஜ்யத்தினுடைய தொடக்கத்தின் ஒரு அம்சமானது பெரும்பாலான வாசகர்களுக்குத் தெரிந்திருக்குமானால், அது தேவனுடைய ஜனங்கள் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்காக மீட்கப்படுவது தான். உதாரணமாகப் பார்த்தால், இந்த அற்புதங்கள் இயேசு பூமிக்கு கொண்டு வந்த ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை பிரதிநிதித்துவப்படுத்துவது தான், சுவிசேஷங்கள் இயேசுவின் அற்புதங்களில் அதிக கவனம் செலுத்துவதற்கு ஒரு முக்கிய காரணம் ஆகும் . இயேசுவின் அற்புதங்கள் தேவனுடைய மக்கள் வரவிருக்கும் யுகத்தில் நிரந்தரமாக அனுபவிக்கப்போகும் ராஜ்ய ஆசீர்வாதங்களின் தற்காலிக முன்னறிவிப்புகளாக இருந்தன. இதற்கு அப்பால், ஏழைகள், தேவையுள்ளவர்கள் மற்றும் பிறரின் கைகளால் துன்பப்பட்டவர்களுக்கு சமூக நீதி குறித்த இயேசுவின் கவனமும் ராஜ்யத்தின் முக்கியமான ஆசீர்வாதங்களை பிரதிநிதித்துவப்படுத்தின.

இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் அற்புதங்களும் சமூக நீதியும் தனிச்சிறப்புடைய ஆசீர்வாதங்களாகும், ஆனால், தன்னை விசுவாசித்த அனைவருக்கும் கிறிஸ்து அளித்த நித்திய இரட்சிப்பின் பரிசே தேவனுடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில் கிடைத்த மிகப்பெரிய ஆசீர்வாதம் ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதனால்தான் கொலோசெயர் 1:13-14 இல் கிறிஸ்துவில் இரட்சிப்பைப் பெறுவது என்பது ஒரு ராஜ்யத்திலிருந்து இன்னொரு ராஜ்யத்திற்கு விடுதலையடைதல் என்று பவுல் விவரித்தார்.

> இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிறார், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலொசெயர் 1:13-14).

ராஜ்ய ஆசீர்வாதங்களுக்குள்ளான மீட்பின் கருப்பொருளானது, புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை ஏன் அதிகமாக வலியுறுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. அப்போஸ்தல ஊழியத்தின் முடிவில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் மீது பரிசுத்த ஆவி பொழிந்தருளப்படுதல், ஒவ்வொரு விசுவாசிக்கும் வழங்கப்பட்ட வரவிருக்கும் உலகத்தின் ஒரு ஆசீர்வாதமாகும். 2 கொரிந்தியர் 1:21-22 இல் நாம் வாசிப்பது போல:

> நம்மை அபிஷேகம்பண்ணினவர் தேவனே. அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார் (2 கொரிந்தியர் 1:21-22).

இந்தப் பகுதி எபேசியர் 1:14க்கு இணையாக உள்ளது. இரண்டு பகுதிகளும் பரிசுத்த ஆவியானவர் ”நாம் கிறிஸ்துவுக்குரியர்கள் என்பதற்கான முத்திரை” என்பதைக் குறிக்கின்றன. அவர் ”வரவிருப்பவைகளுக்கு உத்தரவாதம் தரக்கூடிய ஒரு அச்சாரம்” ஆவார். வேறு வார்த்தைகளில் கூறினால், இன்று நம் வாழ்வில் தேவனுடைய வல்லமையாக இருக்கிற பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து மகிமையில் திரும்ப வரும்போது கிறிஸ்துவின் சீஷர்கள் பெறப்போகிற மகத்தான சுதந்திரத்தின் முதல் தவணை ஆவார்.

கிறிஸ்துவின் ராஜ்யத்தினுடைய தொடர்ச்சியின் போதும் தேவனுடைய ஜனங்கள் மீட்கப்படுவார்கள் என்பதை புதிய ஏற்பாடு கூறுகிறது. தற்போதைய சபை வாழ்க்கையில், தேவன் தம்முடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்குள்ளாக அவர்களை எவ்வாறு ஏற்கனவே மீட்டார் என்பதை புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கிறிஸ்துவின் சீஷர்களுக்கு நினைவூட்டி ஊக்குவித்தார்கள்.நினைவூட்டி ஊக்குவித்தார்கள். நம்முடைய பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பிலிருந்து தேவன் நம்மை இரட்சித்தது மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவரை இலவசமாக அவருடைய சபைக்கு தருகிறார் என்பதையும் புதிய ஏற்பாட்டு இறையியல் வலியுறுத்துகிறது. உதாரணத்திற்காக, 1 கொரிந்தியர் 4:20 யை கவனிக்கவும்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது (1 கொரிந்தியர் 4:20).

பல இடங்களைப் போலவே, இங்கே பவுலின் மனதில் இருந்த “பெலம்” என்கிற வார்த்தை பரிசுத்த ஆவியின் பெலம் ஆகும்.

தேவனுடைய ஆவி என்பது அவருடைய மக்களுக்கு தேவன் தருகிற ஆசீர்வாதங்களின் அதிசயமான யதார்த்தமாகும். அவர் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார், அவருடைய கனியை நம் வாழ்வில் உருவாக்குகிறார், மகிழ்ச்சியால் நிரப்புகிறார், நம்முடைய எதிரிகளுக்கு எதிராக அவருடைய பெலத்தால் நம்மை பலப்படுத்துகிறார். கிறிஸ்துவினுடைய சபையின் பல கிளைகள் இன்று விசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் பங்கை வலியுறுத்துவதில்லை என்ற போதிலும், கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது அவர் நம்முடைய மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறார்.

வரவிருக்கும் ராஜ்யத்தில் இன்னும் பெரிய ஆசீர்வாதங்களைப் பெறுவோம் என்கிற நம்பிக்கையில் தங்களை நிலைநிறுத்த அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியில் வாழும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை புதிய ஏற்பாட்டு இறையியல் ஊக்குவிக்கிறது.

இன்னும் வரப்போகிற ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களின் வெளிச்சத்தில் உண்மையாக இருக்க வேண்டும் என கிறிஸ்துவின் சீஷர்களை எபிரெயர் 12:28 அழைக்கிறது:

> ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். (எபிரெயர் 12:28).

யாக்கோபு 2:5 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:

> தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா? (யாக்கோபு 2:5).

ஐசுவரியவான்கள் ராஜ்யத்தைப் பெறப்போவது அல்ல என்பதால் அவர்களுக்கு பாரபட்சம் காட்டுவதை நிறுத்துமாறு சபையை யாக்கோபு கேட்டுக்கொண்டார். மாறாக, “விசுவாசத்தில் ஐசுவரியமுள்ளவர்கள்” மற்றும் “அவரை நேசிப்பவர்கள்” “அவர் வாக்குத்தத்தம் செய்த ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள்.”



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசு ராஜ்யத்தைத் துவக்கியபோது தம் ஜனங்கள் ராஜ்ய ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் பொருட்டாக மீட்டார். அவருடைய ராஜ்ய ஆசீர்வாதங்கள் வரலாறு முழுவதும் சபையின் வாழ்க்கையில் தொடர்ந்திருக்கின்றன. ஆனால் தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களுக்குள்ளாக தேவனுடைய ஜனங்கள் முழுமையாக மீட்கப்படுவது ராஜ்யத்தின் இறுதி நிறைவு வரை நிறைவேற்றப்படாது என்று வேதம் போதிக்கிறது. ராஜ்யம் நிறைவேற்றப்படுகையில், தேவனுடைய ஜனங்கள் ராஜ்யத்திற்காக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களையும் முழுமையாக அனுபவிப்பார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 11:15 இல் நாம் வாசிப்பது போல:

> உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார் (வெளிப்படுத்தின விசேஷம் 11:15).

கிறிஸ்து திரும்பி வரும்போது, உலக ராஜ்யம் அழிக்கப்பட்டு தேவனுடைய வெற்றிகரமான ராஜ்யம் முழுமையாக நிறுவப்படும்.

வெளிப்படுத்தின விசேஷம் 5:9-10 யைக் கவனியுங்கள், அங்கு பரலோகத்திலுள்ளவைகள் கிறிஸ்துவைத் துதித்துப் பாடுகின்றன:

> தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர். எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் (வெளிப்படுத்தின விசேஷம் 5:9-10).

ராஜ்யத்தின் நிறைவில், தேவனுடைய ஜனங்கள் "ஆசாரியர்க [ளின்] ராஜ்யமாக" மாற்றப்படுவார்கள், மேலும் "அவர்கள் பூமியில் ஆட்சி செய்வார்கள்."

> இயேசு மீண்டும் வந்து, அவருடைய இறுதி வெற்றியை அடைவதைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, அதிகாரத்தால் ஜெயித்தல் என்று பிரெஞ்சுக்காரர்கள் சொல்வதைப் போல அதிகாரத்தின் மூலம் இயேசு தனது எதிரிகளை வென்றெடுப்பதைப் பற்றி இங்கே கூறவில்லை . வெளிப்படுத்தின விசேஷத்தில் அது இயேசுவின் வாயிலிருந்து வரும் பட்டயத்தைப் பற்றி பேசுகிறது, அது நிச்சயமாக வார்த்தையின் பட்டயமும், நீதியின் பட்டயமுமாய்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருக்கிறது, அந்த கடைசி நியாயத்தீர்ப்பு எல்லாவற்றையும் வெளியரங்கமாக்குவதைப் பற்றியதாய் இருக்கிறது. அதேபோல் பரிசுத்தவான்களைப் பொறுத்த வரை, குறிப்பாக புதிய ஏற்பாட்டு சூழலில், அவர்கள் நிரூபிக்கப்படுதல் முக்கிய கருப்பொருளில் ஒன்றாக இருக்கிறது. அவர்கள் இயேசுவை தொடர்ந்து விசுவாசித்து, மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டி, சத்துருக்களை சிநேகித்து, இதையெல்லாம் முழு முட்டாள்தனம் என்று உலகம் சொல்லும் வேளையில் இதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, நியாயத்தீர்ப்பில், எல்லா காரியங்களும் தெளிவுபடுத்தப்படும், எல்லாம் வெளியரங்கமாக்கப்படும்; உண்மை வெளிவரும், அது பரிசுத்தவான்களுக்கு நற்செய்தியாகவும், இயேசுவையும் அவருடைய செய்தியையும் எதிர்ப்பதில் மும்முரம் காட்டிய துன்மார்க்கருக்கு கெட்ட செய்தியாகவும் இருக்கும்.

– Dr. சீன் மாக்டோனப்

இயேசுவின் மேசியா ஊழியத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவனுடைய எதிரிகளின் தோல்வியையும் அவருடைய ஜனங்கள் ராஜ்ய ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கு மீட்கப்படுதலையும் குறித்து எழுதி புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் நம் கவனத்தை ஈர்த்தனர். இந்த கூறுகள் முதலில் தொடர்பில்லாதவைகளாகத் தோன்றினாலும், அவை ஒன்றிணைந்து புதிய ஏற்பாட்டு இறையியலில் அழுத்தமாக சொல்லப்படுகின்றன, ஏனெனில் அவை கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் வருகை என்கிற ஒரு முக்கியமான கருப்பொருளைக் குறிக்கின்றன.

# முடிவுரை

இந்த பாடத்தில், புதிய ஏற்பாட்டு இறையியலில் தேவனுடைய ராஜ்யத்தின் முக்கியத்துவம் என்ன என்பதைப் பார்த்தோம். புதிய ஏற்பாட்டின் ஒரு சிறிய உபதேசமாக இருப்பதற்குப் பதிலாக, தேவனுடைய ராஜ்யம் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கற்பித்தவற்றின் மையப்பொருளை வடிவமைக்கிறது. ராஜ்யத்தின் நற்செய்தியுடன் இது எவ்வாறு சரியாக இருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்தோம். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவு ஆகியவற்றில் புதிய ஏற்பாட்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இறையியல் எவ்வாறு ராஜ்யத்தின் வருகையை மையமாகக் கொண்டுள்ளது என்பதையும் நாம் பார்த்தோம்.

நாம் பார்த்திருக்கிறபடி, புதிய ஏற்பாட்டு விசுவாசம் என்பது முழுவதுமாக தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியது என்று சொன்னால் அது மிகையாகாது. புதிய ஏற்பாட்டு இறையியல் தேவனுடைய ராஜ்யத்திற்கான வெற்றியின் நற்செய்தியைப் பற்றி வலியுறுத்துகிறது, மேலும் இந்த வெற்றி கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று நிலைகளில் எவ்வாறு வந்துள்ளது, வருகிறது மற்றும் வரும் ஆகியவற்றையும் வலியுறுத்துகிறது. ராஜ்யத்தைக் குறித்த இந்த அடிப்படை கருத்துக்கள் புதிய ஏற்பாட்டின் மிக முக்கியமான கருப்பொருள்களைக் குறிக்கின்றன. அவற்றை மனதில் வைத்திருப்பது புதிய ஏற்பாட்டு இறையியல் பற்றிய நமது புரிதலை மிகவும் மேம்படுத்தும். புதிய ஏற்பாட்டிலுள்ள போதனைகளில் புதிய முக்கியத்துவத்தைக் காண்போம். கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தின் கருப்பொருள் புதிய ஏற்பாட்டு இறையியலின் ஒவ்வொரு அம்சத்திற்குள்ளும் இருக்கிறது என்பதில் எந்த கேள்வியும் இல்லை.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.